செ. கு. எண்:225 நாள் :24.08.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.8.2013

திருப்பூர் மாவட்டம், **திருமூர்த்தி அணையிலிருந்து** பரம்பிக்குளம் பிரதான கால்வாய் வழியாக நான்காம் மண்டல பாசனத்திற்கும், தளி வாய்க்கால் பாசன அமைப்பின் கீழ் உள்ள பாசன பகுதிகளுக்கும் தண்ணீர் திறந்து விடுமாறு திருமூர்த்தி நீர்த்தேக்க திட்டக்குழு மற்றும் தளி வாய்க்கால் வடபூதிநத்தம் கிராம நீரினை பயன்படுத்துவோர் சங்கம் உள்ளிட்ட திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் பிரதான கால்வாய் வழியாக நான்காம் மண்டல பாசனத்திற்கும், தளி வாய்க்கால் பாசன அமைப்பின் கீழ் உள்ள பாசன பகுதிகளுக்கும் **26.8.2013** முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், **திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர்** மாவட்டங்களிலுள்ள **96,854 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9